**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**ந.க.எண்.003610 / எச்.1 / 2022** **நாள் : 05.05.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6 – மே 2022, இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் – தேர்வர்களின் வருகை புரியாதோர் விவரத்தினை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் தொடர்பான கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்:04.05.2022.

*****

பார்வையில் காணும் கடிதத்தில் மே 2022 இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பாக, முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு வருகை புரியாதோர் (**Absentees entry**) / மொழிப்பாட விலக்குபெற்றோர் (Language Exemption) போன்ற விவரங்களை பிற்பகல் 2 மணி முதல் 3 மணிக்குள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

வருகை புரிந்த தேர்வர்கள் / வருகை புரியாத தேர்வர்களின் விவர அறிக்கையினை அரசிற்கு அனுப்ப வேண்டியுள்ளதால், 06.05.2022 முதல் இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்விற்கு வருகை புரியாதோர் விவரத்தினை பிற்பகல் 1.30 மணிக்குள் தவறாது இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தெரிவித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் எவ்வித காலதாமதம் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ள தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்./–**
**இயக்குநர்**

**நகல் :**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள் – தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்.